# தமிழ் இலக்கண வளர்ச்சியில் சமணத்தின் பங்கு

முனைவர் ரா நாகேந்திரன்

கௌரவ விரிவுரையாளர்

தமிழ்த்துறை, அரசு கலை மற்றும்

அறிவியல் கல்லூரி, அருப்புக் கோட்டை

விருதுநகர் மாவட்டம் 626134. rrnagendran622gmail.com

50

**ஆய்வுச்சுருக்கம்**

உலகில் காணப்படும் பழமையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. அது தனக்கென்று இலக்கியங்களையும்இ இலக்கணங்களையும் கொண்டுள்ள மொழியாகத் திகழ்கின்றது. சங்க இலக்கியங்கள் காப்பிய இலக்கியங்கள் முதலான இலக்கியங்களையும் தொல்காப்பியம், நன்னூல் முதலான பல்வேறு இலக்கணங்களையும் தமிழ்மொழி தன்னகத்தே கொண்டுள்ளது. சங்க இலக்கியங்கள் முதற்கொண்டு காணப்படுகின்ற இலக்கியங்களும் தொல்காப்பியம் முதலான பல்வேறு இலக்கணங்களும் பல்வேறு சமயங்களோடு தொடர்புடையாகவே அவை காணப்படுகின்றன. அக் காலத்தில் நிலவிய சைவம், வைணவம் பௌத்தம், சமணம் முதலான பல்வேறு சமயங்களோடு இலக்கியங்களும், இலக்கணங்களும் இரண்டறக் கலந்து அவைகள் தோன்றியுள்ளன. குறிப்பாக வைதீகத்திற்கு எதிராக அக்காலத்தில் தோன்றிய சமயங்களான பௌத்தமும், சமணமும் மக்கள் மத்தியில் சிறப்பானதொரு வளர்ச்சியைப் பெற்றன. அச்சமயங்கள் தமிழ்மொழியில் காணப்படுகின்ற இலக்கண இலக்கியங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன. தீர்த்தங்கர்களின் அடிப்படையாகத் தோன்றிய சமணம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு சிறப்பானதொரு பங்களிப்பினைச் செய்துள்ளது. தமிழ் மொழியில் தோன்றிய தொல்காப்பியம் முதலான பல்வேறு இலக்கண வளர்ச்சிக்குச் சமணம் சிறந்ததொரு தொண்;டினை வழங்கியுள்ளது. அந்த வகையில் தமிழ் மொழியில் தோன்றிய இலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்டு **'தமிழ் இலக்கண வளர்ச்சியில் சமணத்தின் பங்கு'** என்னும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. தமிழகத்தின் சமய நிலை, தமிழ் இலக்கியங்களும் சமணமும், தமிழ் இலக்கணங்களும் சமணமும், தமிழ் மொழியும்தொல்காப்பியமும், தமிழ் மொழியும் பிற்கால இலக்கண நூல்களும் என்னும் உட்தலைப்புகளைக் கொண்டு அக் காலத்திய சமண சமயத்தின் தமிழ் இலக்கணத்திற்கான பங்களிப்பினை இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

**தமிழகத்தின் சமய நிலை**

சங்க காலத்தில் நிலவிய இயற்கை வழிபாடு காலப்போக்கில் மாயோன் என்ற திருமால் வழிபாடு, சேயோன் என்ற முருக வழிபாடு, இந்திர வழிபாடு, வருண வழிபாடு போன்ற வழிபாடுகளாக வளர்ச்சியடைந்தது. ஆரம்ப காலத்தில் கௌமாரம், சாக்தம், சௌரம் போன்ற வழிபாடுகளாக இருந்த

சமயங்கள் இந்து வைணவம் போன்ற சமயங்களடங்கிய வைதீகச் சமயங்களாக அமைந்தன. இச்சமயங்களில் நால்வருணப் பாகுபாடு முதலியவை காணப்பட்டன. இவற்றிற்கு எதிராக பௌத்தம் மற்றும் சமண மதங்கள் தோன்றின. எனவே அக் காலத்தில் சைவம், வைணவம்,பௌத்தம்,சமணம் போன்ற சமயங்கள் இருந்தன என்றும் அச்சமயங்களிடையே போட்டிகளும்,பூசல்களும் காணப்பட்டன என்பதனையம் அறிந்து கொள்ளலாம். சைவம் முதலான அம்மதங்கள் மக்களிடையே வளர்ச்சி பெற்றதோடு, அம்மக்களின் மொழியில் காணப்பட்ட இலக்கண இலக்கிய வளர்ச்சிக்கும் அவைகள் உறுதுணையாக இருந்தன. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு சமணமதமும் சிறந்ததொரு பங்களிப்பினை வழங்கியுள்ளது என்று பல்வேறு அறிஞர்கள் கூறுகின்றனர். சமணர்களின் பங்களிப்பு குறித்து

'தமிழ்நாட்டில் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, யாப்பருங்கலக்காரிகை யாப்பருங்கலங்கலம் விருத்தி, நேமிநாதம், நன்னூல், அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், நிகண்டுகள், நாலடியார், நான்மணிக்கடிகைஇ பழமொழி நானூறு, திணைமாலை நூற்றைம்பது ஆகிய இலக்கியங்கள் சமணர்களின் படைப்பேயாகும். திருக்குறளும் சமண இலக்கியம் என்றே கூறப்படுகிறது. சுருங்கக் கூறின் சமயம், மொழி, இலக்கியம், தத்துவம் ஆன்மீகம், வாழ்வியல், கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியம் போன்ற துறைகளுக்கு சமணர்களின் பங்களிப்பு வரலாற்றுக்குச் சிறப்புக்குரியவை' 1 என்று க.வெங்கடேசன் தம்முடைய நூலில் குறிப்பிடுகின்றாொர். இதன் மு{லம் சமணர்களின் பங்களிப்பினை அறிந்து கொள்ள முடிகின்றது.

தமிழகத்தில் சமணத்தின் நிலையை அறிந்து கொள்வதற்கு முன்னர் வட இந்தியாவில் அதன் தோற்றத்தினைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். ஆதி நாதர் முதல் மகாவீரர் வரை 24 தீர்த்தங்கரர்கள் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களுள் 23 வது தீர்த்தங்கரராகிய பர்சுவநாதருமஇ; 24 தீர்த்தங்கரராகிய மகாவீரரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். மகாவீரர் என்பவர் கி;மு 540ல் வைசாலிக்கு அருகில் உள்ள கிராமத்தில் பிறந்தவராகக் கருதப்படுகின்றார். அவரைத் தொடர்நது சமண சமயத்திற்குத் தலைமை வகித்தவாகளாக சுதர்மன்,சம்பு ஸ்வாமி முதலானோர் குறிப்பிடப்படுகின்றனர். பத்திரபாகு என்பவர் சந்திரகுப்த மௌரியரோடு தென்னகம் வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. பத்திரபாகுவின் சீடராக விசாகர் என்பவர் தமிழ்நாட்டிற்கு வந்தார். அவர் காலத்திலிருந்து சமண சமயம் தமிழகத்தில் பரவ ஆரம்பித்தது. இக்கருத்தினை முனைவர்அ.தட்ஷிணாமு{ர்த்தி தம்முடைய நூலில்

'சந்திரகுப்த மௌரியரின் குருநாதர் பத்திரபாகு முனிவர் 12000 மாணாக்கருடன் மைசூரில் சிரவணபெலகோலாவுக்கு வந்து தங்கினார் என்றும் அவருடைய மாணாக்கர்கள் சமயப்பணியில் ஈடுபட்டனர் என்றும் கூறுவர். விசாகர் என்பவர் பாண்டிய நாட்டில் பணி செய்தார்'2
என்று குறிப்பிடுகின்றார்.

இவர்களுக்கு முன்னதாக இருக்கக்கூடிய தீர்த்தங்கர்கள் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. அதே வேளையில் இவர்கள் ஏன் முக்கியத்துவம் பெறவில்லை என்பது ஆய்வுக்குரிய ஒன்று. அதற்குரிய காரணமாக முனைவர் த.ரமேஷ் என்பவர் தம்முடைய நூலில்

‘ஆதிநாதர் முதல் மகாவீரர் வரை 24 தீர்த்தங்கரர்கள் தோன்றி இம்மதத்தை வளர்த்தனர். இவர்களில் 23வது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதரையும், 24வது தீர்த்தங்கரராகிய மகாவீரரையும் வரலாற்றுக் காலத்தியவர்களாக வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஏனெனில் மற்ற முதல் 22 தீர்த்தங்கரர்களும் அதிகமான உயரமும் பருமனும் கொண்டதோடு மட்டுமன்று பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் உயிர் வாழ்ந்தனர் என்றும் கூறப்படுவதேயாகும்’3

என்ற கருத்தினைக் குறிப்பிடுகின்றார். இக் கருத்து ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருந்தாலும், முழுமையான காரணத்தினை அறிந்து கொள்ள முடியவில்லை. அக் காலத்தில் சமணம் வளர்ச்சியடைந்த நேரத்தில் வைதீக சமயங்களான சைவமும்இ வைணவமும் மக்களிடையே நாயன்மார்களாலும், ஆழ்வர்களாலும் பிரபலமாயின என்பதையும் இங்கு கவனத்தில் கொண்டாக வேண்டும். இதனைப் பற்றி தி.சு.நடராசன் தம்முடைய நூலில்

‘மோதி அழித்து விடுதல் என்பது ஒருமுறை: உறிஞ்சி அழித்தல் என்பது இன்னொரு முறை. இரண்டையுமே பக்தியக்கம் செய்தது. சமண பவுத்தங்களின் சில கருத்தியல்களையமஇ; சில நிறுவன முறைகளையும், சில பரிகார தெய்வங்களையம்,சில வார்த்தைகளையும், வைதீக சமய முறைகள் உறிஞ்சிக் கொண்டன’4

என்று குறிப்பிடுகின்றார்.

மேற்கண்ட கூற்றின் மு{லம் அக்கால சமய நிலைகளை அறிந்து கொள்ள முடியும்.

**தமிழ் இலக்கியங்களும் சமணமும்**

மக்களை நெறிப்படுத்த தோன்றிய பல்வேறு சமயங்களுள் இடைக்காலத்தில் ஏற்பட்ட சமயங்களாகப் பௌத்தமும், சமணமும் அறியப்படுகின்றன. இச்சமயங்கள் தமிழ் மொழிக்குச் சிறந்ததொரு பங்களிப்பை வழங்கியுள்ளன. குறிப்பாக சங்க இலக்கியங்களில் பல பாடல்களின் இம்மதங்களின் செல்வாக்கு காணப்படுகின்றன. அதே போன்று ஐம்பெருங்காப்பியங்கள் மற்றும் ஐஞ்சிறுகாப்பியங்கள் போன்றவை பௌத்த மற்றும் சமண இலக்கியங்களாகவே காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் சமயச் சார்பற்ற காப்பியங்கள் என்று கருதப்படகின்ற அதே வேளையில் சமண கருத்துக்கள் மிக அதிகமாகவே காணப்படுகின்றன. இக்காப்பியத்தில் முதன்மைக் கதை மாந்தராகக் கவுந்தியடிகள் சமணத் துறவி ஆவார்.

சிலப்பதிகாரத்தைத் தொடர்ந்து மணிமேகலை என்னும் காப்பியம் ஒரு முழுமையான பௌத்தக் காப்பியமாகவே அமைந்துள்ளது. பௌத்த மதக் கொள்கைகளை வெளிப்படுத்தும் வகையில் இக் காப்பியம் திகழ்கின்றது. சீவகசிந்தாமணி என்னும் காப்பியம் ஒரு முழுமையான சமணக் காப்பியம் ஆகும். சீவகன் எட்டுப் பெண்மணிகளை மணந்து விட்டுப் பின்னர் முக்தியடைவதை இக்காப்பியம் எடுத்தியம்புகின்றது. வளையாபதிஇ குண்டலகேசி போன்ற காப்பியங்கள் பௌத்த காப்பியங்களாவே அமைந்துள்ளன. ஐஞ்சிறுகாப்பியங்களாகக் கருதப்படுகின்ற உதயண குமார காவியம், நாக குமார காவியம, யசோதர காவியம்,நீலகேசி. சூளாமணி போன்ற காப்பியங்கள் முழுக்க முழுக்க சமணக் காப்பியங்களாகவே கருதப்படுகின்றன.

சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் சமண நூல்களாகவே அறியப்படுகின்றன. இந்நூல்களுள் நாலடியார் என்று அழைக்கப்படுகின்ற நூல் சமணர்களால் இயற்றப்பட்ட நூலாகவே அமைந்துள்ளது. இந்நூல் பல்வேறு சமண முனிவர்களால் இயற்றப்பட்டது என்ற குறிப்பிடப்படுகின்றது. வட நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தினால் தமிழகம் வந்த சமணர்கள் பாண்டிய மன்னனின் ஆதரவினைப் பெற்று சில காலம் தங்கியிருந்து விட்டு, தங்களுடைய நாட்டிற்குச் செல்லும் போது ஏடுகளில் பாடல்களை எழுதி வைத்துச் சென்றனர். அவையே நாலடியார் என்று தொகுக்கப்பட்டது. இதனைப் பற்றி மது.ச.விமலானந்தம் தம்முடைய இலக்கிய வரலாற்று நூலில்

‘பாண்டிய நாட்டில் வற்கடம் வந்த காலை பிறநாடு சென்ற சமணப் புலவர்கள் ஒவ்வொரு பாட்டை எழுதி வைத்துச் சென்றனர். அங்ஙனம் எண்ணாயிரம் ஏடுகள் இருந்தன. இவற்றை வையையில் எறியுமாறு பாண்டியன் வேண்ட அவற்றில் 400 பாடல்கள் எதிரேறிக் கரையில் ஒதுங்கின. அவற்றின் தொகுதியே இது என்பர்’ 5

மேற்கண்ட கருத்தின் அடிப்படையில் பாண்டிய மன்னனிடம் அடைக்கலமாக இருந்த சமண முனிவர்கள் பிரியா விடை மு{லமாக மன்னனிடம் சொல்லாமல் தங்கள் நாட்டிற்குச் சென்றனர். அவ்வாறு செல்லும் போது ஏடுகளில் பாடல்களை எழுதி வைத்துச் சென்றனர். அவர்கள் ஏன் அவ்வாறு எழுதி வைத்துச் சென்றனர்? என்பதற்கான காரணம் தெரியவில்லை. ஒரு வேளை தங்களுடைய ஞாபகமாக பாடல்கள் மன்னன் நினைவிலிருக்கட்டும் என்பதற்காக எழுதி வைத்து விட்டு சென்றிருக்கலாம் என்றே ஊகித்துக் கொள்ளலாம். ஆனாலும் இது ஆய்வுக்குரிய ஒன்று.

**தமிழ் இலக்கணங்களும் சமணமும்**

சமண மதம் தமிழ் இலக்கியங்களுக்குப் பங்காற்றிய அதே வேளையில்இ தமிழ் இலக்கண வளர்ச்சிக்கும் அரியதொரு பங்களிப்பினை வழங்கியுள்ளது. தொல்காப்பியம், நன்னூல், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பா மாலை போன்ற நூல்களை இயற்றியவர்கள் சமண மதத்தினைச் சார்நதவர்களாகவே அறியப்படுகின்றனர். இலக்கண நூல்களான தொல்காப்பியம் நேமிநாதம், நன்னூல், நம்பியகப்பொருள்,யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வச்சணந்திமாலை, அவிநயம் ஆகிய எட்டு நூல்களம் சமணர்கள் உருவாக்கிய இலக்கண நூல்களாகும். சமணர்கள் அக்காலத்தில் மக்களிடையே தங்கள் நிலைகளான அன்னதானம், அபயதானம், ஔடதானம், சாத்திரதானம் போன்றவற்றினை செய்தனர். மேற்கண்டவற்றுள் சாத்திரதானம் என்பது கல்வி உதவிகளைச் செய்வதாகும். மக்களிடையே சமயத்தினைப் பரப்புவதற்கு கல்வியை ஒரு பொருட்டாகப் பயன்படுத்திக் கொண்டனர். குறிப்பாக அவர்கள் தங்களுடைய சமய நூல்களைப் படியெடுத்து இலவசமாக மக்களுக்குக் கொடுத்தனர். இலக்கியங்களை அவர்களே இயற்றினர். அதோடு கொல்லாமையறத்தை பெரிதும் வற்புறுத்தினர். தரையில் நடக்கும் பொழுது மயிற்பீலிகளால் கூட்டி விட்டு நடந்தனர். விளக்கேற்றுமுன்பே உண்டனர். மு{;க்கில் துணியினைக் கட்டிக் கொண்டனர். இவ்வாறான பல்வேறு கட்டுப்பாடுகளை அவர்கள் கையாண்டனர். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத்

தொண்டாற்றிய அதே வேளையில் தமிழ் இலக்கணத்திற்கும் அவர்கள் தொண்டாற்ற முயன்றனர். அந்த வகையில் சமணர்கள் தமிழ் இலக்கணத்திற்கு பங்காற்றிய செய்தியினை க.ப.அறவாணன் தம்முடைய நூலில்

'இலக்கியம் முதலான பிற துறைகளை விட இலக்கணத்திற்குச் சைனர் ஆற்றிய பணி மிகுதி.இது ஏன் ? வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் கட்டுப்பாட்டோடு வாழ்ந்தவர் சைனர். உலகச் சமயங்களிலேயே மிகுந்த கட்டுத்திட்டம் வாய்ந்தது சைனம் என்பது அறிஞர் கருத்து. உண்பது உடுப்பது உறைவது வாழ்வது அனைத்திலுமே கட்டுப்பாடு கட்டுப்பாடு என்று வரையறைகளை அமைத்துக் கொண்ட அறிஞர்களின் உள்ளம் மொழியிலும் வரையறை காணத் துடித்தது. அத் துடிப்பின் விளைவே மொழியை வரையறைப்படுத்தும் இலக்கணமாக வளர்ந்தது விரிந்தது மலர்ந்தது'6 என்று குறிப்பிடுகின்றார்.

மேற்கண்ட கூற்றின்படி ஒரு மொழியின் வரையறைக்கு இலக்கணம் என்பது அடிப்படை. ஆகையால் சமணர்களும் தமிழ் மொழியில் காணப்பட்ட இலக்கணத்திற்கு உரியதொரு பங்களிப்பினை வழங்கினர் என்பதை அறிந்து கொள்ளலாம். அதே வேளையில் சமணர்கள் தங்களுடைய மதத்தினை மக்களிடையே வளர்க்கும் பொருட்டு தமி;ழ் மொழியின் இலக்கண இலக்கியத்திற்குகப் பங்களிப்பினை செய்தனர் என்றே ஊகித்துக் கொள்ளலாம்.

**தமிழ் மொழியும் தொல்காப்பியமும்**

தமிழ் மொழியில் முழுமையாகக் கிடைக்கக்கூடிய நூலாகத் தொல்காப்பியம் குறிப்பிடப்படுகின்றது. இந்நூலினை எழுதிய தொல்காப்பியர் சமணர் என்றே அறியப்படுகின்றார்.

'தமிழிலுள்ள மிகப் பழமையான நூல் தொல்காப்பியமாகும். இதுவே தமிழரின் நாகரிகப் பழைமையையும் பெருமையையும் காட்டி நிற்பது. தொல்காப்பியரைச் சிலர் சமணர் என்பர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ச.வையாபுரிப்பிள்ளையாவார்'7

என்று முனைவர் அ. தட்ஷிணாமு{ர்த்தி தம்முடைய நூலில் குறிப்பிடுகின்றார்.

மேலும் அவர்

'தொல்காப்பியத்திற்குப் பிறகு மொழியில் தோன்றிய மாற்றங்களையெல்லாம் உள்ளடக்கி கி.பி 13ம் நூற்றாண்டில் நன்னூலை இயற்றிய பெருமை சமணராகிய பவணந்தியைச் சாரும். சின்னூல் என வழங்கும் நேமிநாதம் குணவீர பண்டிதர் என்ற சமணருடைய படைப்பாகும். தொல்காப்பியத்திற் கூறப்படும் அகப்பொருட் கருத்துக்களை எளிமைப்படுத்தி எழுதப்பட்ட நூலே நம்பியகப் பொருளாகும். இதன் ஆசிரியர் நாற்கவிராச நம்பி யென்னும் சமணராவார். தொல்காப்பியத்திற்குப் பிறகு யாப்பில் எத்துணையோ மாற்றங்கள் ஏற்பட்டன. பாவினங்கள் பல உருவாயிவிட்டன. அவைகளையெல்லாம் தழுவிய புதுயாப்பு நூல் தேவையென்றுணர்ந்து அமித்தசாகரர் என்னம் சமணர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் இரு நூல்களை இயற்றியருளினார். எனவே இலக்கண வளர்ச்சியில் முன்னிறபோரும் சமணர்களே'8 என்றும் சமணர்களின் பங்களிப்பினைக் கூறுகின்றார்.

எனவே தொல்காப்பியத்திற்குப் பிறகான பல்வேறு இலக்கண நூல்கள் சமணர்களால் இயற்றப்பட்டவை என்பதை அறிந்து கொள்ளலாம்.

அதோடு தொல்காப்பியத்தினை இயற்றிய தொல்காப்பியர் சமணர் என்பதை பல்வேறு காரணங்கள் அடிப்படையில் க.ப.அறவாணன் தம்முடைய நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். அவரின் கூற்றுப்படி

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன'; (தொல்.)

என்ற நூற்பாவின் கருத்தில் கொண்டு தொல்காப்பியரை சைனர் என்றே குறிப்பிடுகின்றார். மேலும் அவர் 'தொல்காப்பியர் குறிப்பிடுகின்;ற உயிர்ப்பகுப்பு வினையின் நீங்கல் ஊழ்வினை நிலையாமை'9 முதலான பல்வேறு காரணங்களைக் குறிப்பிடுகின்றார். இதன் மு{லம் தொல்காப்பியர் ஒரு சமணர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**தமிழ் மொழியும் பிற்கால இலக்கண நூல்களும்**

தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய பல்வேறு இலக்கண நூல்களுள் தோன்றின. அவைகளுள்

- அவிநயம்
- அவிநயனார் யாப்பு
- அவிநயனார் புறநடை
- அவிநயனார் களவியல்
- அவிநயனார் புறத்திணைப்படலம்
- இந்திரகாளியம்
- யாப்பருங்கலம்
- யாப்பருங்கலக்காரிகை
- அமுதசாகரம்
- நேமிநாதம்
- வெண்பாப்பாட்டியல்
- நன்னூல்
- அகப்பொருள் விளக்கம்

போன்ற நூல்கள் சமணர்களின் பங்களிப்பாக அமைந்துள்ளது.

சமண சமயத்தில் ஒன்பது பொருள்கள் கூறப்படுகின்றன. இத்தகைய பொருள்களினைப் பற்றி மேருமந்திர புராணத்தில் குறிப்பு உள்ளது. அவை

- சீவன்
- அசீவன்
- புண்ணியம்
- பாவம்

- ஆசிரவம்
- பந்தம்
- சம்வரை
- நிர்சரை
- மோட்சம் 10 என்பனவாகும்;.

மேற்கண்ட கருத்துக்கள் அவிநயம் என்னும் நூலில் குறிப்பிடப்படுகின்றன.

அவிநயம், அவிநயனார் யாப்பு, அவிநயனார் புறநடை, அவிநயனார் களவியல்,அவிநயனார் புறத்திணைப்படலம் போன்ற நூல்கள் சமண நூல்களாகவே அறியப்படுகின்றன. இந்நூல்களுக்குப் பிறகு யாப்பினைப் பற்றிய நூல்களாக யாப்பருங்கலம் மற்றும் யாப்பருங்கலக் காரிகை போன்ற நூலகள் தோன்றின. இந்நூல்களும் சமண நூல்களாகவே கருதப்படுகின்றன. இந்நூல்களை எழுதிய அமிாதசாகரர் சமணராகவே கருதப்படுகின்றார்.

‘வெறிகமழ் தாமரை மீமிசை ஒதுங்கிய
அறிவனை வணங்கி அறைகுவன் யாப்பே’ (யாப்பருங்கலம்) என்றும்
‘கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்தம் அடிகள் இணையடி ஏத்தி’ (யாப்பருங்கலக்காரிகை) என்றும் அருகதேவனை இவர் குறிப்பிடுவதால் இவர் சைனர் என்று அறியப்படுகின்றார்.

யாப்பருங்கலத்தினை இயற்றிய அமிாதசாகரர் யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலினை இயற்றினார். அதற்குரிய காரணத்தினை க.ப.அறவாணன் தம்முடைய நூலில்

‘யாப்பருங்கலம் செய்தவரே காலப்போக்கில் செய்யுள் இலக்கணத்தை அறிஞர்களின் அவைக்களத்திலிருந்து பொதுமக்களிடம் எடுத்துச் செல்ல யாப்பருங்கலக்காரிகை இயற்றினாரோ என்று எண்ணத் தோன்றகிறது’11 என்று குறிப்பிடுகின்றார்.

இதன் மு{லம் யாப்பு பற்றிய நூல்கள் சமண மதத்தினைச் சார்ந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இந்திரகாளியம் என்னும் நூலும் சமண நூலாகவே கருதப்படுகின்றது. ஆனால் இந்நூல் கிடைக்கப்பெறவில்லை. நேமிநாதம் வச்சணந்தி மாலை என்ற நூல்களும் சமண சமய நூல்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.

‘தொல்காப்பியம் நன்னூல் கால இடைவெளியில் ஓர் இலக்கணப் பாலமாக நேமிநாதம் விளங்குகிறது. வெண்பா யாப்பில் இலக்கண நெறிகளை எடுத்துச் சொல்ல முடியும் என்பதற்கு நேமிநாதம் தனிப்பெரும் சான்று’12
என்ற குறிப்பிடுகின்றார்.

சோழர் காலத்தில் தோன்றிய நூலாக் கருதப்படுகின்ற நன்னூல் என்ற நூலும் சமண நூலாகவே அறியப்படகின்றது. தொல்காப்பியம் என்ற நூலை விளங்கிக் கொள்ள இடைக்காலத்தில் சற்ற சிரமம் இருந்தபடியால் எளிமையான இலக்கணத்தினை மக்களிடையே கொண்டு செல்ல தேவை ஏற்பட்ட காரணத்தின் அடிப்படையிலேயே நன்னூல் போன்ற நூல்கள் தோன்றின. அதற்கு முன்பாக

நேமிநாதம் என்னும் நூல் தோன்றிய காரணத்தினை

‘தொல்காப்பியத்தை நன்கு பயில ஒரு முன்னுரையாக இலக்கண நூலே புதிதாக எழுதப்பட்டது. நேமிநாதம் இந்த அடிப்படையில் தான் தோன்றியது. ‘தொல்காப்பியப் பெருங்கடலைக் கடக்க உதவும் தோணி’ என்ற சிறப்புப் பாயிரத்தில் நேமிநதம் வருணிக்கப்பட்டமை இக் கருத்தை வற்புறுத்துகிறது’13

என்று க.ப.அறவாணன் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியத்திற்குப் பிந்தைய இலக்கண இலக்கிய வரலாறுகளை எடுத்தக்காட்ட நன்னூல் தோன்றியது என்று கூறப்படுகிறது. தொல்காப்பிய காலத்தில் வடமொழிச் செல்வாக்கு காணப்பட்டதினைப் போல நன்னூலார் காலத்திலும் வடமொழிச் செல்வாக்கு காணப்பட்டது. இதனை எடுத்துக் காட்ட நன்னூலார் பதவியல் என்னும் இயலில் எடுத்துக்காட்டுகின்றார்.

நன்னூல்-தொல்காப்பியத்தை விட எளிமையான நூலாகவே கருதப்படுகின்றது. தொல்காப்பிய எழுத்ததிகார மற்றும் சொல்லதிகார நுர்றபாக்களை எளிமைப்படுத்தியது எளிதில் மனதில் பதியக்கூடிய அளவில் கருத்துக்களைச் சொல்வது மரபான தகவல்களை விட்டுவிடாமலும்இ புதிய செய்திகளைப் சேர்த்தும் சொல்வது போன்ற பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட நூலாகவே இந்நூல் அமைந்திருப்பதை இங்கு எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக பொருள் இலக்கிணத்தினை அடிப்படையாகக் கொண்டு அகப்பொருள் இலக்கணமாகிய நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் என்னும் நூலும், புறப் பொருள் இலக்கணத்தை எடுத்துக் காட்ட ஐயனாரிதனார் என்பவரால் இயற்றப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலும் சமண சமயம் சார்ந்த நூல்களாகவே கருதப்படுகின்றன.

**தொகுப்புரை**

தமிழ் இலக்கண இலக்கிய வரலாற்றில் சைவம் வைணவம் பௌத்தம் போன்ற சமயங்களின் வரிசையில் சமணம் சிறந்ததொரு பங்களிப்பினை வழங்கியுள்ளது என்பதனை மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில் நாம் அறிந்து கொள்ளலாம். தமிழ் இலக்கியத்திற்கு பணி செய்த சமண மதம் தமிழ் இலக்கணத்திற்கும் சிறந்ததொரு பங்களிப்பினை செய்துள்ளதை தமிழ் இலக்கண நூல்களில் இருந்து நாம் அறிந்து கொள்கின்றோம். தொல்காப்பியம்இ நன்னுல் அவிநயம், நேமிநாதம், வீரசோழியம் அகப்பொருள் விளக்கம் முதலான பல்வேறு இலக்கண நூல்களை சமண மதம் தமிழ் மொழிக்கு வழங்கியுள்ளது. இவை அனைத்தையும் ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுது இன்னும் பல அரிய தகவல்கள் கிடைக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்புகள்**

1. க. வெங்கடேசன் பண்டைய இந்திய வரலாறு பக். 176
2. முனைவர் அ.தட்ஷிணாமு{ர்த்தி தமிழர் நாகரிகமும் பண்பாடும் பக்.361
3. முனைவர் த.ரமேஷ் நடுநாட்டில் சமணம் பக். 1
4. தி.சு நடராசன் தமிழ்ச் சமு{கத்தில் வைதீக சமயம் பக். 167
5. மது.ச. விமலானந்தன் தமிழ் இலக்கிய வரலாறு பக். 80

6. க.ப அறவாணன் சமணர் வளர்த்த தமழ் இலக்கணம் பக். 16
7. முனைவர் அ.தட்ஷிணாமு{ர்த்தி தமிழர் நாகரிகமும் பண்பாடும் பக்.369
8. மேலது பக்.370
9. க.ப அறவாணன் சமணர் வளர்த்த தமழ் இலக்கணம் பக்.25
10. மேருமந்திரபுராணம் செய். 68
11. க.ப அறவாணன் சமணர் வளர்த்த தமழ் இலக்கணம் பக். 109
12. மேலது பக். 157
13. மேலது பக். 164

**துணைநூற் பட்டியல்**

1. அறவாணன் க.ப சமணம் வளர்த்த தமிழ் இலக்கணம்

இரண்டாம் பதிப்பு திசம்பர் 1993

சமணாலயம்

11 இரண்டாம் தெரு

மோகன் நகர்

புதுச்சேரி – 605 005

2. முனைவர் அ தட்ஷிணாமுர்த்தி

தமிழர் நாகரிகமும் பண்பாடும்

திருத்திய மறுபதிப்பு ஏப்ரல் 2021

ஐந்திணைப் பதிப்பகம்

முன்றாவது தெரு மேற்கு

அண்ணாநகர் சென்னை – 600 040

3. நடராசன் தி.சு

தமிழகத்தில் வைதீக சமயம் வரலாறும் வக்கணைகளும்

முதற் பதிப்பு திசம்பர் 2008

நியூ செஞ்சூரி புக் சென்டர்

41 பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்

அம்பத்தூர்

சென்னை 98

4. க. வெங்கடேசன்

பண்டைக்கால இந்திய வரலாறு

முதற்பதிப்பு நவம்பர் 2017

வர்த்தமானன் பதிப்பகம்

21 தியாகராயநகர்

சென்னை
5.த.ரமேஷ்
நடுநாட்டில் சமணம்
முதற்பதிப்பு சூன் 2016
நியூ செஞ்சூரி புக் சென்டர்
41 பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர்
சென்னை 98
6 .விமலானந்தன்
தமிழ் இலக்கிய வரலாறு
அபிராமி பதிப்பகம்
சென்னை
7. மாணிக்கவாசகன் ஞா
தொல்காப்பியம்
மூன்றாம் பதிப்பு நவம்பர் 2010
உமா பதிப்பகம்
பவளக்காரத் தெரு
மண்ணடி
சென்னை 600 001